**7.11.2024**
ஊடக வெளியீடு

**DATO' IR. PATHMANATHAN K.**
CEO, PBAHB and PBAPP.

**பினாங்கிற்கான 4 கூடுதல் மத்திய அரசின் நீர் திட்டங்கள்**

1. **440 MLD லஹர் யூய் பம்ப் ஹவுஸ் விரிவாக்கப்பட்ட மெங்குவாங் அணையை (EMD) வேகமாக நிரப்ப உதவுகிறது**
2. **440 MLD இரட்டை உபயோக நீர்க்குழாய் திட்டம் (EMD இருந்து சுங்கை டுவா கேனல் வரை)**
3. **சுங்கை கிரியான் நதிக்கு வெளியே சேமிப்புத் திட்டம் (ORSS)**
4. **சுங்கை டுவா ORSS**

பினாங்கு, வியாழன், 7.11.2024: பினாங்குக்கான 4 முக்கிய நீர் விநியோகத் திட்டங்களைச் செயல்படுத்த பினாங்கு மாநில அரசு மற்றும் PBAPP, மத்திய அரசுடன் இணைந்து செயல்படுகிறது.

கடந்த மாதம், பினாங்கு மாநில அரசாங்கத்தைப் பிரதிநிதித்து ஆட்சிக்குழு உறுப்பினர் மாண்புமிகு ஜைரில் கிர் ஜோஹாரி, எரிசக்தி மாற்றம் மற்றும் நீர் உருமாற்றம் அமைச்சரின் (பெட்ரா) நீர் விநியோக பிரிவின் (WSD) இயக்குநர் ஹாஜி சுலைமான் பின் கமிசன், தலைமையில் புத்ராஜெயாவில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டார்.

இந்தச் சந்திப்புக் கூட்டத்தில் கீழ்க்கண்ட திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது:

## 1. ஒரு நாளைக்கு 440 மில்லியன் லிட்டர் (MLD) லஹர் யூய் பம்ப் ஹவுஸ்

இந்த பம்ப் ஹவுஸ் மெங்குவாங் அணை விரிவாக்கத் திட்டத்தின் (MDEP) 2C கட்டத்தைக் குறிக்கிறது. 86.4 பில்லியன் லிட்டர் நிரப்பக்கூடிய விரிவாக்கப்பட்ட மெங்குவாங் அணையை (EMD) மழைக் காலங்களில் நிரப்ப சுங்கை மூடாவிலிருந்து கூடுதலாக 440 MLD மூல நீரை பம்ப் செய்ய இது கட்டப்படும்.

லஹர் யோய் பம்ப் ஹவுஸ், EMD-ஐ "பிரதான வறட்சி இருப்பு" என்பதிலிருந்து "தினசரி அணை" ஆக மாற்றும் PBAPP இன் திட்டத்தை ஆதரிக்கிறது (புதிய 114 MLD மெங்குவாங் அணை நீர் சுத்திகரிப்பு ஆலை 2025 இல் நிறைவடைந்தது).

இத்திட்டம் "சுங்கை மூடா சம்பவம்" அதாவது பினாங்கில் நீர் விநியோக சேவைகளை அச்சுறுத்தும் போதும், அவசரகால சூழ்நிலைகளின் போதும், 1,040 MLD வரை அதிகபட்ச EMD நீர் விநியோகம் சாத்தியம் மற்றும் நிலையானது என்பதை இது உறுதி செய்யும்.

WSD படி, லஹர் யோய் பம்ப் ஹவுஸ் கட்டுவதற்கான கூட்டரசு திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இது ரிம1.2 பில்லியன் MDEP ஒதுக்கீட்டில் இருந்து மீதமுள்ள நிதி மூலம் நிதியளிக்கப்படும்.

**2. 440 MLD இரட்டை உபயோக நீர்க்குழாய் திட்டம் (EMD முதல் சுங்கை டுவா கால்வாய் வரை)**

**பினாங்கு மாநில அரசு மற்றும் PBAPP ஆகியவை EMD இல் இருந்து சுங்கை டுவா கால்வாயில் புதிய 440 MLD இரட்டை உபயோகம் கொண்ட குழாய் அமைப்பதற்கு மத்திய அரசின் உதவியை நாடுகிறது. முன்மொழியப்பட்ட லஹர் யோயி பம்ப் ஹவுஸின் செயல்பாடுகளை ஆதரிக்க இந்த குழாய் தேவைப்படுகிறது.**

மேலும், இது மழைக் காலங்களில் அணைக்கு கூடுதலாக 440 MLD மூல நீரைக் கொண்டு செல்லும். மறுபுறம், இது EMD இலிருந்து கூடுதலாக 440 MLD நீரை சுங்கை டுவா கால்வாயிக்கு விநியோகித்து சுங்கை டுவா நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் அவசரக்கால சூழ்நிலைகளில் பயன்படுத்த உதவுகிறது.

இதன் விளைவாக, இந்தக் குழாய் இயக்கப்படும் போது, EMD இன் அதிகபட்ச வரவு 600 MLD லிருந்து 1,040 MLD ஆக உயர்த்தப்படும். EMD இலிருந்து 1,040 MLD வரை நீர் இருப்பதால், பினாங்கில் நீர் விநியோக சேவைகளைப் பாதிக்கும் எதிர்கால "சுங்கை மூடா சம்பவங்களின்" அச்சுறுத்தல் அல்லது தாக்கத்தை PBAPP திறன்பட குறைக்க முடியும்.

WSD, பினாங்கு மாநில அரசு மற்றும் PBAPP-ஐ, இந்த இரட்டை உபயோகத்திற்கான நீர்க்குழாயை இணைக்க, கட்டம் 2C (MDEP) இன்

திட்டத்தை விரிவுப்படுத்த, "மாற்றத்தின் அறிவிப்பை" (NOC) சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளது. முடிந்தால், MDEP-க்காக ஒதுக்கப்பட்ட மீதமுள்ள மத்திய அரசின் நிதிக்கொண்டு இந்தக் குழாய் அமைக்கப் பயன்படுத்தப்படும்.

3. சுங்கை கிரியான் ORSS (நதிநீர் சேமிப்புத் திட்டம்)

4. சுங்கை மூடா ORSS

இந்த 2 ORSS திட்டங்களும் அடிப்படையில் வட செபராங் பிறை(SPU) சுங்கை மூடா நதிக்கரை மற்றும் தென் செபராங் பிறை சுங்கை கிரியான் நதிக்கரை அருகாமையில் மேம்பாட்டிற்காக முன்மொழியப்பட்ட “சிறிய அணை” திட்டங்களாகும்.

ஒரு நதியில் இருந்து அதிகப்படியான மூல நீர் ORSS இல் சேமிக்கப்படலாம். வறட்சி, விபத்துகள் அல்லது பிற அவசரக்கால சூழ்நிலைகளின் போது 24 - 48 மணிநேர நீர் விநியோக சேவைகளை ஆதரிக்க "உபரி நீர்" பயன்படுத்தலாம். பின்னர், ஆற்றில் இருந்து அதிகப்படியான மூல நீரைக் கொண்டு ORSS மீண்டும் நிரப்பப்படலாம்.

சுருக்கமாக, இந்த 2 ORSS திட்டங்கள் SPU மற்றும் SPS இல் தொடர்ச்சியான சிறந்த நீர் விநியோகத்தை ஆதரிக்க "கூடுதல் காப்பீட்டு திட்டங்களாக" கருதப்படலாம்.

WSD, 13வது மலேசியத் திட்டத்தின் (2026 - 2030) கீழ் ORSS திட்டங்களுக்கு மத்திய அரசின் நிதியுதவிக்கு விண்ணப்பிக்குமாறு பினாங்கு மாநில அரசு மற்றும் PBAPP ஐ கேட்டுக் கொண்டுள்ளது.

**WCP 2030 மற்றும் பேராக்-பினாங்கு நீர் திட்டமும் இடம்பெறும்.**

இந்த 4 கூட்டரசு திட்டங்கள் பினாங்கின் ரிம1.184 பில்லியன் நீர் தற்செயல் திட்டம் 2030 (WCP 2030) மற்றும் ரிம4.5 பில்லியன் "பேராக்-பினாங்கு நீர் திட்டம்" ஆகியவற்றுடன் இணைந்து செயல்படுத்தப்பட வேண்டிய கூடுதல் நீர் விநியோக திட்டங்களாகும்.

"பேராக்-பினாங்கு நீர் திட்டத்தை" 2030க்குள் மத்திய அரசு செயல்படுத்துவதை ஆதரிக்கும் அதே வேளையில், திட்டமிட்டபடி 8 WCP

2030 திட்டங்களில் மீதமுள்ள 6 திட்டங்களை PBAPP தொடர்ந்து செயல்படுத்தும்.

இந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்படும் போது, இந்த 4 கூடுதல் கூட்டரசு திட்டங்கள் பினாங்கில் 24/7/365 அடிப்படையில் தொடர்ச்சியான சிறந்த நீர் விநியோகத்தை உறுதிப்படுத்தவும், பருவநிலை மாற்றத்தின் காலகட்டத்திலும் பினாங்கின் நீர்-அழுத்த நிலையைப் பாதுகாக்கவும் இது உதவும்.

அதன்படி, WSD, PETRA மற்றும் தேசிய நீர் சேவை ஆணையம் (SPAN) ஆகியவற்றின் ஒத்துழைப்பு மற்றும் ஆதரவிற்காக PBAPP தனது நன்றியைப் பதிவு செய்ய விரும்புகிறது.

நன்றி.

---


எழுத்தாக்கம் : Syarifah Nasywa bt Syed Feisal Barakbah
Corporate Communications Unit

மின்னஞ்சல் : syarifah@pba.com.my